தினமலர்
உண்மையின் உரைகல்

**மரபணு மாற்ற பயிர் வழக்கு: நீதிபதி தலைமையில் குழு இல்லை**

First Published : 22 Oct 2011 12:40:13 AM IST

புது தில்லி, அக். 21: மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை பயன்படுத்துவது, ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பான சட்ட வரையறைகளை நிர்ணயம் செய்யும் நிபுணர் குழுவுக்கு ஓய்வு பெற்ற நீதிபதியை தலைவராக நியமிக்க உச்ச நீதிமன்றம் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது, அதனைப் பயன்படுத்துவது தொடர்பாக சட்டதிட்டங்களை வரையறை செய்யப்படவுள்ளது. இதற்காக நிபுணர்குழு அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா தலைமையிலான பெஞ்ச் முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை எதிர்க்கும் குழுவினர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் காமினி ஜெய்ஸ்வால், இக்குழுவின் தலைவரை நியமிக்க ஒருமித்த கருத்து இதுவரை எட்டப்படவில்லை. ஓய்வு பெற்ற நீதிபதிகூட தலைவராக நியமிக்கப்படலாம் என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதிகளிடம் கருத்துக் கேட்கப்பட்டது. ஆனால் எவரும் இக்குழுவுக்கு தலைமை வகிக்க விருப்பம் தெரிவிக்கவில்லை. ஓய்வு பெற்ற நீதிபதிதான் தலைவராக நியமிக்கப்பட வேண்டுமென நீங்கள் கருதினால், அவர்களில் ஒருவரிடமாவது இதற்கு சம்மதம் பெறவேண்டும் என்று தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா கூறினார்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 2004-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அவ்வப்போது இது தொடர்பான உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பித்து வருவது குறிப்பிடத்தக்கது.